# பனிமயம்

அக்டோபர் 2024

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அன்பு மக்களே,

வணக்கம்.

செப்டம்பர் மாதமானது விவிலிய மாதமாக தமிழக திருச்சபையினால் எல்லா பங்குகளிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. விவிலிய வினாடி வினா எழுத்துப் போட்டி, நேர்முகப் போட்டி, ஓராண்டில் திருவிவிலியம், விவிலிய கதாப் பாத்திரங்களின் வழி விவிலிய அறிவை வளர்த்தல், விவிலிய கலைநிகழ்ச்சிகள் என்று பல வகைகளில் விவிலியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு விவிலிய அறிவில் மக்கள் வளர்வதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. நற்கருணையும், திருவிவிலியமும் நம் விசுவாசத்தின் இரண்டு கண்களாகக் கொண்டு நற்கருணை பக்தியிலும் வளர்வோம். மேலும் செப்டம்பர் மாதத்தில் மட்டுமல்லாது வருடம் முழுவதுமே விவிலிய வாசிப்பு, விவிலிய தியானிப்பு முதலியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுப்போம். விவிலியம் காட்டும் வழியில் நடப்பதை நம் இலக்காகக் கொண்டு வாழ்வோம்.

அக்டோபர் மாதத்தில் மரியன்னையை மகிமைப்படுத்தும் விதமாக செபமாலை மாதம் என்று அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. செபமாலை செபிப்பது மரியன்னையை மகிமைப்படுத்துவது மட்டுமல்லாமல் மீட்பின் மறைபொருளை தியானிப்பதுமாகும். இயேசுவின் வாழ்வையும் அவர் நமக்காகத் தந்த மறைபொருள்களை செபமாலை வழியாக சிந்திக்க திருச்சபை நம்மை அழைக்கிறது.

ஒவ்வொரு நாளும் கோவிலில் கூடி வந்து நம் முன்னோர்கள் செபமாலை செபித்தார்கள். குடும்பங்களில் ஒன்றுகூடி செபமாலை செபித்தார்கள். இன்று அந்த நல்ல பழக்கங்கள் மறைந்துவிட்டன. ஆனால் பேராலயப் பங்கில் லூர்து அன்னை கெபியில் ஒவ்வொரு நாளும் அன்னையின் பிள்ளைகள் கூடி வந்து செபமாலை செபிப்பதைப் பார்க்கும்போது மகிழ்ச்சியடைகிறேன். இத்தகைய நல்ல பாரம்பரியத்தை நம் பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுப்போம். தனிப்பட்ட விதத்தில் ஒவ்வொரு நாளும் செபமாலை செபிக்கவும் தவறாதீர்கள்.

மாதாவின் பரிந்துரை வழியாக அன்னையின் பிள்ளைகள் அனைவரும் அனைத்து ஆசீர்வாதங்களையும் பெற்று வாழ அன்போடு வாழ்த்துகிறேன், செபிக்கிறேன், ஆசீர் அளிக்கிறேன்.

செபமாலையை மீட்பின் ஆயுதமாகவும், பாவத்தை வெல்லும் கேடயமாகவும் கொண்டு வாழ்வோம்.

God Bless You All



அன்பும், ஆசீரும்

**அருள்பணி. ஸ்டார்வின்**

திருத்தல அதிபர் & பங்குத் தந்தை

# உள்ளே...

1. மரியன்னையின் திருப்பெயர்கள் . . . . . . . . . . . 4

அருள்பணி. குமார்ராஜா

2. இறைவனின் திருச்சபை. . . . . . . . . . . . . . . . . 6

கலாபன் வாஸ்

3. ஆயுள் காப்பீடு . . . . . . . . . . . . . . . . . . . . . . 8

முனைவர் .சி.ஜாக்சன்

4. தாயின் மகத்துவம் . . . . . . . . . . . . . . . . . . . 10

ரோஸ் சேவியர்

5. கனிகள் இனிப்பும் கசப்பும் - ஒரே மரத்தில் . . . 12

ம. வெனான்சியுஸ்

6. பனிமய சாட்சியம் . . . . . . . . . . . . . . . . . . . 13

7. மகிழ்வைத் தேடி.... . . . . . . . . . . . . . . . . . . 14

ஜோ. ரெஜினா கிரகோரி

8. வாடாத மலர்கள் . . . . . . . . . . . . . . . . . . . 16

சுரேஷ்

9. முழு இரவு தொடர் செபமாலை - 2024 . . . . . 17

10. விவிலியப்போட்டி. . . . . . . . . . . . . . . . . . . 18

11. பனிமயப் பகிர்வு. . . . . . . . . . . . . . . . . . . . 21

உதயம் 26 தாரகை 2

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருள்பணி. ஸ்டார்வின்
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருள்பணி. ஸ்டார்வின்

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### பகிரப்படும் பணிக்காக...

கூட்டுப்பொறுப்பின் அடையாளமான கூட்டியக்க வாழ்வுமுறையைத் தொடர்ந்து தக்கவைத்து பங்கேற்பு, கூட்டுறவு, திருத்தூதுப்பணி ஆகியவற்றை அருள்பணியாளர்கள், துறவிகள் பொதுநிலையினரிடம் திருஅவை ஊக்கப்படுத்த நாம் மன்றாடுவோம்.

9 *மரியன்னையின் திருப்பெயர்கள்*

# பாவக் கறையில்லாத அன்னை



நம் தாய்த் திருஅவை அன்னை மரியாவைப் பல்வேறு பெயர்களால் வாழ்த்துகிறது. அவற்றுள் ஒன்றுதான் பாவக் கறையில்லாத அன்னை (Mother Undefiled) மானிடர் அனைவரும் பாவத்தால் மாசடைந்துள்ள சூழலில், அன்னை மரியா மட்டுமே எந்த மாசுமற்றவர் என்பது இதன் பொருள். இன்னும் சிறப்பாக, தாயின் கருவில் உருவானபோதே பிறப்புநிலைப் பாவத்தினின்று அவர் இறைவனால் விடுவிக்கப்பட்டார் என்றும் இந்தப் பெயர் சுட்டிக்காட்டுகிறது.

பாவக் கறையில்லாமல் நாம் அனைவருமே வாழவேண்டும் என்பதே இறைவனின் திருவுளம், நமது அழைப்பும்கூட. யோவான் கண்ட திருவெளிப்பாட்டுக் காட்சியில் “தங்கள் ஆடைகளைக் **கறைப்படுத்திக்கொள்ளாத** சிலர் சர்தையில் உள்ளனர். அவர்கள் வெண்ணாடை அணிந்து என்னுடன் நடந்து வருவார்கள். அவர்கள் அதற்குத் தகுதி பெற்றவர்களே” (திவெ 3:4) என்று புனித வாழ்வு வாழ்ந்தவர்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. மறுவாழ்வில் மட்டுமல்ல, இவ்வுலக வாழ்விலேயே நாம் பாவக் கறையின்றி வாழவே திருஅவையாக அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை “அத்திருச்சபை, கறை திரையோ, வேறு எக்குறையோ இல்லாமல் தூய்மையும் மாசற்றதுமாய் மாட்சியுடன் தம்முன் விளங்குமாறு இப்படிச் செய்தார்” (எபே 5:27) என்னும் சொற்களில் குறிப்பிடுகிறார் பவுலடியார். திருஅவைக்கும், புனிதர்களுக்கும் முன்னோடியாகவும், மாதிரியாகவுமே பாவக் கறையில்லாமல் அன்னை மரியாவை உருவாக்கினார் இரக்கம் நிறைந்த இறைவன்.

திருத்தூதர் பணிகள் நூலில் புறஇனத்தாரும் இயேசுவால் மீட்கப்பட்டுள்ளனர், எனவே அவர்களுக்கும் தூய ஆவியார் அருளப்படுகிறார் என்னும் செய்தி பேதுருவுக்கு ஒரு காட்சியின் வழியாக உணர்த்தப்பட்டது. காட்சியில் காணப்படும் பறவைகள், விலங்குகளைக் “கொன்று சாப்பிடு” என்று அவருக்குச் சொல்லப்படுகிறது. அப்போது பேதுரு, தூய்மையற்றதும், தீட்டானதுமான எதையும் தாம் உண்பதில்லை என்று பதில் சொல்கிறார். அப்போது “தூய்மையானது என்று கடவுள் கருதுவதைத் தீட்டாகக் கருதாதே” (திப 11:8-9) என்னும் குரலை அவர் கேட்கிறார். இதன் வழியாகப் புற இனத்தாரையும் கடவுள் மீட்பு பெறத் தேர்ந்தெடுத்துள்ளார் என்று உணர்ந்துகொள்கிறார் பேதுரு. “தூய்மையானது என்று கடவுள் கருதுவதைத் தீட்டாகக் கருதாதே” என்னும் சொற்கள் அன்னை மரியாவுக்கும் பொருந்துகின்றன. கடவுள் மரியாவைத் தேர்ந்தெடுத்து, அவரைப் பாவக் கறையில்லாதவராக உருவாக்கினார். கடவுளே பாவக் கறையற்றவர் என்று சொல்லிவிட்ட பிறகு, மற்றவர்கள் மரியாவை எப்படி மாசுள்ளவராக எண்ணவும் முடியும்? எனவே, அவரைப் பாவக் கறையில்லாத அன்னை என்று போற்றுவது பொருத்தமானதே. ★

10

# அன்புக்குரிய அன்னை



லொரெட்டோ மன்றாட்டு மாலையில் அன்னை மரியாவுக்குச் சூட்டப்பட்டுள்ள புகழ்மாலைப் பெயர்களுள் ஒன்றுதான் அன்புக்குரிய அன்னை (Mother Most Amiable). கடவுளின் அன்புக்கு மட்டுமல்ல, மாந்தர் அனைவரின் அன்புக்கும் உரியவரே அன்னை மரியா என்று இதன் வழியாக நாம் அறிக்கையிடுகிறோம்.

நம் அனைவருக்குமே நம் தாய் மிகவும் அன்புள்ள தாய். அனைவருக்கும் மேலாக நாம் அன்பு செய்வதும் நம் அன்னையைத்தான்.

கர்தினால் புனித ஜான் ஹென்றி நியூமன் இந்தப் பெயரை மரியாவின் அமல உற்பவத்துடன் இணைத்துப் பார்க்கிறார். பாவக் கறையின்றி உற்பவித்ததால், அவர் மிகவும் அன்புக்குரியவராகிறார் என்பது நியூமனின் பார்வை. அன்பு, அழகு, புனிதம் அனைத்தையும் பாவம் அகற்றிவிடுகிறது. எங்கே பாவம் இல்லையோ, அங்கே அன்பு, அழகு, புனிதம் அனைத்தும் வந்து விடுகின்றன என்னும் நியூமனின் வாதம் நன்றாக இருக்கிறதல்லவா? எனவே, பாவக்கறையற்ற மரியா மிகவும் அன்புக்குரியவர் என்பது இயல்பான ஒன்றுதான் என்கிறார் அவர்.

பிலமோனுக்கு எழுதிய திருமுகத்தில் பிலமோனிடம் அடிமையாய்ப் பணிசெய்த ஒனேசிமுவை இனி அன்பார்ந்த சகோதரனாக பிலமோன் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று வேண்டுகோள் வைக்கிறார் பவுலடியார். அப்போது அவர், "இனி அவனை நீர் அடிமையாக அல்ல, அடிமையை விட மேலானவனாக, அதாவது உம்முடைய அன்பார்ந்த சகோதரனாக ஏற்றுக் கொள்ளும். அவன் என் தனிப்பட்ட அன்புக்குரியவன். அப்படியானால் மனிதன் என்னும் முறையிலும் ஆண்டவரைச் சார்ந்தவன் என்னும் முறையிலும் அவன் எத்துணை மேலாக உம் அன்புக்குரியவனாகிறான்" (பில 1:16) என்னும் வலிமையான வாதத்தை முன் வைக்கிறார் பவுலடியார். ஒரு மனிதன், ஒரு திருத்தூதரின் தனிப்பட்ட அன்புக்குரியவன், ஆண்டவரைச் சார்ந்தவன் என்னும் மூன்று விதங்களில் ஒனேசிமு அன்புக்குரியவன் என்னும் தகுதியை அடைகிறார்.

அன்னை மரியாவோ ஆண்டவர் இயேசுவின் தாய், கடவுளின் தனிப்பட்ட அன்புக்குரியவர், திருத்தூதர் அனைவருக்கும் அன்னை போன்றவர் என்னும் வகையில் உலகின் மாந்தர் அனைவரிலும் மிகவும் அன்புக்குரியவர் என்னும் பேற்றினை அடைகிறார். இன்னும் சிறப்பான வகையில் கத்தோலிக்கத் திருஅவையைச் சேர்ந்த கத்தோலிக்கர்கள் அனைவரின் அன்புக்கும் அவர் உகந்தவர் என்கிறார் கர்தினால் நியூமன். ஆங்கிலிக்கன் சபையிலிருந்து கத்தோலிக்கத் திருமறையைத் தழுவியவர் என்ற வகையில் கர்தினால் நியூமனால் இதை உறுதிபடச் சொல்ல முடியும்.

எல்லாப் பிள்ளைகளுக்கும் தங்கள் அம்மாதான் உலகிலேயே சிறந்த அம்மா. அன்பிற்கெல்லையில்லாத அம்மா. கத்தோலிக்கராகிய நமக்கு அவரே மிகவும் அன்புக்குரிய அன்னை.



அருள்பணி. குமார்ராஜா

# இறைவனின் திருச்சபை

**இருக்கும் நிலையிலேயே துவக்குங்கள்!**

கிறித்தவச் சமூகம் இறைவனோடு ஒன்றித்திருப்பதால் மீட்பு சாத்தியமாகிறது... இந்தச் சமூகம்தான் உலகைப் பாதுகாக்க முடியும்.

ஆனால், இன்றைய உலகில் காணப்படும் அநீதி - அக்கிரமங்கள் - போர் - விபரீதப் போக்கு ஆகியவற்றைப் பார்க்கும்போது, மீட்பு எப்படிச் சாத்தியமாகும் என்ற ஐயப்பாடு எழுவது உண்மைதான். இறைவன் விரும்பியபடி உலகை மாற்றி அமைக்க முடியாது என்ற மனநிலை உருவாகிறது.

இயலாது - முடியாது என்பதை விட்டொழித்து, உயிர்த்த இயேசுவின் தூய ஆவி நம்மில் செயல்படுகிறது என்ற நம்பிக்கை தேவை. அனைத்துலகிலும் சமூகங்களைக் கட்டி எழுப்புகிறவர் அவரன்றோ! இயேசு வீணாகச் சிலுவைச் சாவை ஏற்றுக் கொண்டாரா - அல்லது - மீட்புக்காகப் பாடுபட்டாரா? அவரில் நாம் தஞ்சமடையும்போது அனைத்தும் சாத்தியமாகும்.

"கடவுளின் வாக்கு வழியாக யாவும் படைக்கப்பட்டன. இந்த வாக்கு மனிதராகி மனிதர் தம் உலகில் வாழ்ந்திட வந்தார். அன்பு செய்ய வேண்டுமென்ற புதிய கட்டளையே மனிதரின் அடிப்படைச் சட்டம் எனவும் அவர் நமக்குக் கற்பிக்கிறார். எனவே, அன்பின் பாதை எல்லா மனிதருக்கும் திறந்திருக்கிறது எனவும், அனைத்துலகச் சகோதரத்துவத்தை நிறுவும் முயற்சி வீணானதல்ல எனவும் அவர் இறையன்பில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு உறுதியளிக்கிறார். மேலும், இவ்வன்பு பெரிய காரியங்களில் மட்டும் பின்பற்ற வேண்டிய ஒன்றல்ல; மாறாக, முக்கியமாக, வாழ்க்கையின் சாதாரணச் சூழ்நிலைகளில் நாம் பின்பற்ற வேண்டியதொன்று என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பாவிகளாகிய நம் அனைவருக்காகவும், தம் உயிரைக் கொடுத்த அவர், நீதியையும் அமைதியையும் நிலைநாட்டப் பாடுபடுபவர்களின் தோள்மேல் ஊனியல்பும் உலகமும் சுமத்தும் அச்சிலுவையை நாமும் தாங்க வேண்டுமென தம் முன்மாதிரிகையால் நமக்குக் கற்பிக்கின்றார்.

தமது உயிர்த்தெழுதலால் ஆண்டவராக ஏற்படுத்தப்பட்ட கிறிஸ்து விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் பெற்றுள்ளார். தம் ஆவியின் வல்லமையால் மனிதரின் உள்ளங்களில் அவர் செயல் புரிந்து வருகிறார்; வரவிருக்கும் உலகின்மீது விருப்பத்தைத் தூண்டியெழுப்புவதோடு அவர் நின்றுவிடுவதில்லை; மாறாக, மனித குடும்பத்தின் பிற சீரிய விருப்பங்களுக்கும் அவர் உயிரோட்டம் அளித்து அவற்றைத் தூய்மையாக்கி வலுப்படுத்துகின்றார்; மனித குடும்பம் தன் வாழ்வை அதிக மனிதப் பண்புடையதாக்கும் நோக்குடன் செயல்பட்டு அந்நோக்கத்தின்கீழ் மண்ணுலகனைத்தையும் கொணர்வதற்குத் தூண்டுதல் அளிப்பவையே இவ்விருப்பங்கள்... அனைவரும் தன்னலத்தைத் தள்ளிவிட்டு, மண்ணுலகச் சக்திகளையெல்லாம் மனித வாழ்வின் முன்னேற்றத்திற்காக ஒன்று திரட்டி, வருங்காலத்தை நோக்கி விரைந்து சென்றிட அவர் அவர்களைச் சுதந்திரமுடையவர்களாக்குகின்றார். அந்த வருங்காலத்தில் மனுக்குலமே கடவுளுக்குகந்த காணிக்கையாக மாறும் - 'இன்றைய உலகில் திருச்சபை' - எண் : 38.

## "நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்"

நாம் வாழும் இந்த உலகைப் புதுப்பிப்பது நம்முடைய அன்பின் வெளிப்பாடாக இருக்க வேண்டும் என்பதை, பாலை நிலத்தில் ஐயாயிரம் பேருக்கு உணவு அளித்த அருஞ்செயல் வழியாக இறைமகன் நமக்குக் கற்றுத்தருகிறார் (மாற்கு 6:30-44). இயேசுவின் போதனையைக் கேட்பதற்காகப் பின்தொடர்ந்து வந்த மக்களின் பசியைப் போக்கச் சீடர் அவரிடம் வந்து, "இவ்விடம் பாலை நிலம் ஆயிற்றே, ஏற்கனவே நெடுநேரம் ஆகிவிட்டது. சுற்றிலுமுள்ள பட்டிகளுக்கும் ஊாகளுக்கும் சென்று உண்பதற்கு ஏதாவது அவர்களே வாங்கிக் கொள்ளுமாறு நீர் மக்களை அனுப்பிவிடும்" என்று சொன்னபோது, "நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்" - என்று புதிய பாடம் கற்றுக் கொடுத்தார் இயேசு. இருப்பதைப் பகிர்ந்துண்ணும் பண்பை - புதிய கலாச்சாரத்தை அறியச் செய்தார். தங்களுடைய பொறுப்பைத் தட்டிக் கழிக்கப் பார்த்த சீடர்களின் மனப்பான்மையை மாற்றுகிறார்.



அதுபோலவே - நாமும் இன்று நம்முடைய கடமை - பொறுப்பிலிருந்து எப்படியெல்லாமோ தப்பிக்கப் பார்க்கிறோமே! நம் கண்முன் நடைபெறும் அநீதி அக்கிரமங்களைக் கண்டும் காணாததுபோல் நகர்ந்து செல்கிறோமே! துன்புறும் மக்களைப் பார்த்தும் பாராததுபோல் ஒதுங்கிச் செல்கிறோமே? நோயினாலும், வறுமையினாலும் வாடி வதங்கும் சகோதரியை/சகோதரனை ஏறிட்டுப் பார்க்கக் கூட மனம் வருவதில்லையே? ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண்கள் சீரழிக்கப் படுகிறார்களே, எதிர்ப்புத் தெரிவித்தீர்களா? கையறு நிலையில் தவிக்கும் ஏழை வறியோரின் துயர் துடைக்க முற்பட்டோமா?.... .....இப்படி எவற்றையெல்லாம் தட்டிக் கழிக்கிறோமோ, அப்போது இறைவனின் குரல் நம்மை வழிநடத்த வேண்டும் - "எது உன்னிடம் இருக்கிறதோ, அதை வைத்தே முன்னேறு!"

ஏழாம் நூற்றாண்டவரான, புனித அலெக்சாண்ட்ரியா யோவான், ஐந்து அப்பத்தினால் ஐயாயிரம் பேர் உணவருந்திய நிகழ்ச்சியைச் சிறப்பாகப் புரிந்து கொண்டிருந்தார்.

மேற்கு ஆசியா மீது பெர்சியர்கள் படையெடுத்துத் தாக்கியபோது, பாலஸ்தீனிய அகதிகளால் எகிப்து நிரம்பி வழிந்தது. அத்தனை அகதிகளுக்கும் ஆதரவும் உணவும் அளிப்பது இயலாததாயிருந்தது. அந்த நிலையில் ஆயர் யோவான் தம்முடைய தியோக்கோன்மார்களிடம் கூறினார் -

"உலகெங்கிலுமுள்ள பிச்சைக்காரர்கள் உணவுக்காக அலெக்சாண்ட்ரியா வந்தாலும் கவலைப்படாமல், அத்தனை பேருக்கும் உணவளிக்க வேண்டும். ஏனெனில், இறைவனின் பணியாளனான என் வழியாக, தேவையில் உள்ளவர்களுக்கு உதவும் வழியைக் காட்டியுள்ளார்."



கலாபன் வாஸ்

# ஆயுள் காப்பீடு

"ஐயா! திடீர்னு உங்களுக்கு ஏதாவது விபத்தோ, நோயோ, துன்பமோ வந்துச்சுன்னு வச்சுகோங்க. அப்போ இதுதாங்க உங்களுக்கு உதவும். அதனால ஒரு ஆயுள் காப்பீடு எடுத்துவச்சுகோங்க" என காப்பீட்டு நிறுவன முகவர்கள் அடிக்கடி நம்மிடம் சொல்ல கேட்டிருப்போம். அழிந்து போகும் உடலுக்கே ஆயுள் காப்பீடு தேவை எனில் அழியாத ஆன்மாவுக்கு? அப்படி ஒரு ஆயுள் காப்பீடு உண்டென்றால் அதன் பெயர் "செபமாலை".

1890ஆம் ஆண்டு பாரிஸ் நகருக்கு சென்று கொண்டிருந்த இரயிலில் ஒரு முதியவரோடு ஒரு கல்லூரி மாணவன் பயணம் செய்தான். எதிரில் அமர்ந்திருந்த முதியவர் கையில் செபமாலை வைத்து செபித்துக் கொண்டிருந்தார். அப்போது அந்த மாணவன் "மன்னியுங்கள் ஐயா! முதியவர்களுக்கே உரிய இந்த பழைய பக்தி முயற்சியை தாங்கள் இன்னுமா நம்புகிறீர்கள்?" என்று கேட்டான்.

முதியவர் "நிச்சயமாக நம்புகிறேன். நீ அதை நம்பவில்லையா?" என்றார். அதற்கு "ஐயா அறிவியல் அசுர பாய்ச்சலில் செல்லும் இந்த காலத்திலும் இப்படி பழைய மூட நம்பிக்கைகளை பிடித்து கொண்டு வாழாதீர்கள். உங்கள் முகவரியைக் கொடுத்தீர்கள் என்றால் நான் உங்களுக்கு சில அறிவியல் புத்தகங்களை அனுப்பி வைப்பேன். நீங்களும் அதன் பின் மாறலாம்" என்றான் அதிகம் படித்த அந்த கல்லூரி மாணவன்..

அந்த முதியவர் புன்னகையுடன் "தன் முகவரி அட்டையை நீட்டினார். அதில் லூயி பாஸ்டர், விஞ்ஞான ஆய்வகம், பாரிஸ் என்று எழுதப்பட்டிருந்தது. இளைஞனின் முகம் வெளிறியது. அடுத்த நிறுத்தத்திலேயே இளைஞன் இறங்கி வண்டி மாறினான்.

லூயி பாஸ்டர் நுண்ணுயிரியலின் தந்தை என்று அழைக்கப்படும் வேதியியலாளர். நிறைவான ஆயுளும் மகிமைகளும் பெற்ற எளிமை மிக்க கத்தோலிக்கர். மானுடத்திற்கு மாபெரும் உதவிபுரிந்த நல்லவர். அவர் ஒரு கையில் செபமாலையும் மறு கையில் பாடுபட்ட சுரூபமும் ஏந்தி மரித்தார் என வரலாறு சொல்கிறது. செபமாலை நம் அறிவிற்கு அப்பாற்பட்ட இறை ஞானம் என்றால் அது மிகையல்ல ...

அயர்லாந்தில் நடைபெற்ற மதக் கலவரத்தின் போது, கிறித்தவ குருவுக்கு இடம் தந்தாலோ, அல்லது திருப்பலியில் பங்கேற்றாலோ சித்திரவதைக்குள்ளாகி இறந்தனர். அவ்வேளையில் செபமாலையைத் தவிர வேறு எந்த விதத்திலும் தங்கள் விசுவாசத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. ஒவ்வொரு குடும்பமும் செபமாலை செய்தது. அதுவே எங்களது "உலர் திருப்பலி" என்றனர். இப்படியாக எத்தனையோ வரலாற்று நிகழ்வுகளை செபமாலையின் மகிமைக்கு சான்றாக சொல்லலாம்.

செபமாலை சொல்லும்போது மௌனமாகவோ, வாய்விட்டோ கர்த்தர் கற்பித்த செபத்தையும், மங்களவார்த்தை செபத்தையும் சொல்லும் போதும் மறையுண்மைகளை தியானிக்கும் போதும் என்ன நடக்கிறது? அன்னையின் உன்னத மகிமை நிறைந்த கட்டுப்பாட்டுக்குள் நமது ஆன்மா தஞ்சமடைகிறது. நமது ஆன்மாவின் ஏக்கங்கள் நிறைவடைகிறது. நமது நோய்கள் இறை அருளால் நலமடைகிறது. அன்னையின் பரிந்துரையால் வாழ்வின் ஆசீர் விரைவாக நம்மை வந்தடைகிறது. நமக்கே உரிய மனித பலவீனங்கள் குறைகின்றது. எனவே நம் முழுக்கவனத்தையும் ஒருமுகப்படுத்திச்

செய்ய வேண்டிய, உணர்வுகள் அடங்கிய பக்தி முயற்சி செபமாலை.

செபமாலைக்கு இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட வலிமை உண்டு என்று வரலாறே எண்பித்துள்ளது. சோவியத் படைகள் ஆஸ்திரியாவை அபகரித்துக் கொண்டபோது மக்கள் செபஇயக்கத்தினால் அதை எதிர்கொண்டனர். நாள்தோறும் செபமாலை சொல்வதாக பெரும் தொகையினர் வாக்களித்தனர். அதன் விளைவு 1955 மே மாதம் 13ஆம் தேதி பாத்திமா காட்சியின் ஆண்டு நாளில் சோவியத் படைகள் பின்வாங்கத் தொடங்கின. சில நாட்களில் மொத்தப் படைகளுமே வெளியேறின. இதை கண்டு உலகமே வியந்து போனது. ஆனால் திரேசா நைமன் அம்மையார் வியப்படையவில்லை. ஐந்து காய வரம் பெற்ற அப்புனிதை "சோவியத் ஆதிக்கத்திலிருந்து ஆஸ்திரியாவைக் காப்பாற்றியது செபமாலை தான்" என்று பெருமிதத்துடனும் ஐயமின்றியும் அறிக்கையிட்டார்.

**புனிதர்களின் பார்வையில் ஜெபமாலை :**

"திருப்பலிக்குப் பின் அடுத்த அதிக மாபெரும் தெய்வீகம் கொண்டது செபமாலை" - புனித சார்லஸ் பொரோமோயு.

"செபமாலை சொல்லும் ஒரு படையை எனக்குத் தாருங்கள். இந்த உலகை வென்று காட்டுறேன்" - திருத்தந்தை 11ஆம் பத்திநாதர்! "மரியாவின் கோணத்தில் இயேசுவை உற்றுப் பார்க்க செபமாலை உதவுகிறது. இதுவே சிறந்த காட்சிக் கோணம். செபமாலையின் வழியாக கிறிஸ்துவின் பொறுமை, அமைதி, மகிழ்ச்சியை நாம் பெறுகிறோம்" என்கின்றார் ஆறாம் சின்னப்பர்.

"அற்புதமான செபம்! எளிமையிலும் ஆழத்திலும் அற்புதமான செபம்! ஆவேமரியா பின்னணியில் நம் ஆன்மாவின் கண்களில் முன்னே இயேசு கிறிஸ்துவின் வரலாற்று சிறப்பு நிகழ்வுகள் கடந்து செல்கின்றன!" என்கின்றார் மக்களின் திருத்தந்தை இரண்டாம் அருள்சின்னப்பர்.

எண்ணிக்கையில் அதிகமான முஸ்லீம்களை 1571 அக்டோபர் 7ம் தேதி லேபாண்ட்டாவில் கிறிஸ்துவப் படைகள் முறியடித்த போது ஐந்தாம் பத்திநாதர் உரோமையில் அமர்ந்தபடியே லேபாண்ட்டோ வெற்றியை காட்சியில் கண்டு "செபமாலையின் வெற்றி இது" என்றார். அதன் நினைவாக நிறுவப்பட்டதே செபமாலை அன்னை திருநாள் -அக்டோபர் 7.

தீராத பொறுமையாலும் மாறாத அன்பினாலும் 70000 கால்வின் மார்க்கத்தினரை மனந்திருப்பிய புனித பிரான்சிஸ் சலேசியார் "ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் செபமாலையின் மறையுண்மைகளை தியானித்தால் புனிதராவோம்" என்றார்.

"ஒவ்வொரு நாளும் செபமாலை சொல்கிறவன் ஒரு போதும் வேதவிரோதியாக மாட்டான். அவனிடம் பசாசின் முயற்சிகள் பலனற்றுப் போகும். இதை மகிழ்ச்சியோடு என் குருதியினால் கையொப்பமிட்டு அறிக்கையிட நான் தயார்" என்றார் புனித லூய் தெ மாண்ட்ஃபோர்ட்.

அக்டோபர் மாதத்தைத் தனிச்சிறப்பாக செபமாலை மாதம் எனச் சிறப்பிக்கிறோம். இம்மாதத்தில் கோவில்களிலும், பிற கூட்டங்களிலும் சிறப்பாக செபமாலை செபிக்கிறோம். நம் குடும்பங்களில் குடும்ப செபமாலை சொல்லும் பழக்கம் இப்போது அருகி வருகிறது. இந்த அக்டோபர் மாதம் குடும்பமாக செபமாலை ஜெபிக்க தொடங்கலாமே! பரிசுத்த பனிமய அன்னையின் பாசமிகு பிள்ளைகளே! ஆன்மாவுக்கு ஆயுள் காப்பீடு எடுத்து வைக்கத் தயாரா?....



முனைவர் சி.ஜாக்சன்

# தாயின் மகத்துவம்



தாய் என்ற வார்த்தை அனைவரையும் ஈர்க்கும் **தன்**மை உடையது, அன்பு, பாசம், இரக்கம், **அ**ரவணைப்பு, பாதுகாப்பு போன்ற குணங்களைத் **தன்**னகத்தே கொண்டது. இறைவனின் படைக்கும் **தொ**ழிலில் பங்கேற்பவள் தாய் மட்டும்தான். தாயின்றி சேயில்லை. தாயன்பு தன் உயிரையும் அர்ப்பணிக்கும்.

குடும்பத்தில் தாய் தியாகத்தின் வடிவம். "நாம் இறைவனை காண இயலாது. அதனால்தான் நாள்தோறும் இறைவனை தரிசிக்க வேண்டுமென்பதற்காக தாயை ஒவ்வொரு இல்லத்திலும் படைத்திருக்கிறார்" என்றார் ஓர் அறிஞர்.

"தாயிற் சிறந்த கோவிலுமில்லை". (கோ+இல்) இறைவன் குடியிருக்கும் இல்லம் கோவில், தூய்மையானது, அமைதியானது. தாய் மரியாவை "திருக்கோவில்" என்று சொல்வது பொருந்தும். விவிலியத்தில் வானதூதரின் வாழ்த்துரையைப் பெற்று, இறைமகன் இயேசுவை தன் உதரத்தில் கருத்தரித்து, தம்மை சந்திக்க வரும் மரியாவை "ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்?" (லூக்.1:43) என்று தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்ட எலிசபெத் அழைக்கிறார்.

திரு அவையின் ஒன்றிப்பைக் காக்கும் நோக்குடன் கி.பி. 431 ஆம் ஆண்டு எபேசு திருச்சங்கம் கூட்டப்பட்டு அன்னை மரியா "இறைவனின் தாய்", "தேவ தாய்" என்று சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார். 1974 ஆம் ஆண்டு சனவரி 1ஆம் நாள் மரியா "இறைவனின் அன்னை" எனும் திருநாளாக திருத்தந்தை 6ஆம் பவுல் அறிக்கையிட்டார்..

அன்னை மரியாவை கிறிஸ்தவ மக்களின் தாயாக கருதும் மரபு மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே நிலவுகிறது. "மிகவும் இரக்கமுள்ள தாயே" என்னும் மன்றாட்டு மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே வழக்கத்தில் உள்ளது. நான்காம் நூற்றாண்டில்

மரியாவை "வாழ்வோரின் தாய்" என்று புனித எப்பிபானியுஸ் அழைக்கிறார். ஐந்தாம் நூற்றாண்டில் புனித அகுஸ்தின் மரியாவை "கிறிஸ்தவ உறுப்பினர்களின் தாய்" என்று குறிப்பிடுகிறார் (திரு அவை 53 மரியாவும் திருச்சபையும்) ஏனெனில் அந்த தலையானவரின் உறுப்பினரான நம்பிக்கைக் கொண்டோர் திருச்சபையில் பிறக்கும்படி அன்பினால் மரியா ஒத்துழைத்தார்.. இரண்டாம் வத்திக்கான் சங்கமும் "கிறிஸ்துவின் தாய், மக்களின் தாய், நம்பிக்கையாளரின் தாய்" என்று 7,8ஆம் நூற்றாண்டிலிருந்தே குறிப்பிடுகின்றது. (திரு அவை 54-சங்க ஏடுகள்) மரியாவின் "அருள் முறையிலான தாய்மை" அல்லது "அருள் திட்டத்தில் தாய்மை" (திரு அவை 61,62) மனிதருக்கு அருள் வாழ்வைத் திரும்பப் பெற்றுத்தரக் கீழ்ப்படிதல், நம்பிக்கை, எதிர் நோக்கு, பற்றி எரியும் அன்பு என்பவற்றால் நிறைவாழ்வு அலுவலில் மிகச் சிறப்பான விதத்தில் ஒத்துழைத்தார். இதனால் அருள் நிலையில் மரியா நமக்கு தாயாக அமைந்தார். பலவிதங்களில் பரிந்து பேசி நிலையான வாழ்வுக்குத் தேவையான கொடைகளைப் பெற்றுத் தர, தாய்க்குரிய அன்போடு காத்து வருகிறார்.

### திருச்சபையின் தாய் அன்னை மரியா

இயேசுவின் இறப்பு - உயிர்ப்புக்குப் பிறகு மரியாவின் தலைமைப் பண்பு இன்னும் செயலாக்கம் பெற்றது. என நாம் ஊகிக்க இடமிருக்கிறது. ஏனெனில் இயேசுவின் சிலுவைச்சாவைக் கண்டு அஞ்சி சிதறி ஓடி விட்ட சீடர்களை மீண்டும் ஒருங்கிணைத்து அவர்களுக்கு ஊக்கம் அளித்து, இணைந்து, செபித்து, தூய ஆவியின் ஆற்றலைப் பெற உதவி, அவர்களது பணியை தொடர்ந்து ஆற்ற, அவர்களை பல இடங்களுக்கு அனுப்பி வைக்கும் தலைமைப் பணியை தாய்க்குரியத் தன்மையோடு ஆற்றினார்.

கடந்த 11-02-2018 இல் லூர்து அன்னை விழாவன்று திருத்தந்தை பிரான்சிஸ் "அன்னை மரியா திரு அவையின் தாய்" என்னும் பெயரில் ஒரு விழாவை வெளியிட்டார். அவ்விழா பெந்தகோஸ்து பெரு விழாவிற்கு மறு நாள் "மரியா திரு அவையின் தாய்" என்னும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

நம் தாய் மரியா மண்ணகத்தில் மட்டுமின்றி விண்ணகத்திலும் நமக்காகப் பரிந்து பேசும் தாயாகத் திகழ்கிறார். நம் தாய் மரியாவின் விருப்பம் மக்களாகிய நாம் இறைவார்த்தைகளை வாசித்து, தியானிப்பதோடு செபமாலை செபிக்க வேண்டும் என்பதே.

விவிலிய நிகழ்ச்சிகளை பூக்களை இணைத்து கட்டிய பூமாலையாக அன்னையின் அருள்மாலையாக தியானிப்பதற்கேற்றவாறு உள்ளதால் செபமாலை நற்செய்தியின் சுருக்கம் என்கிறார் 6ஆம் சின்னப்பர். 1214 ஆம் ஆண்டு செபமாலை ஆற்றல் வாய்ந்த ஆயுதமாக உருவானது. இளவரசர் யூஜின் ஹங்கேரி நாட்டில் எதிரிகளை வென்று வெற்றி கண்ட அந்நாளை 1716 ஆம் ஆண்டு முதல் உலகம் முழுவதும் அக்டோபர் 7ஆம் நாள் செபமாலை அன்னையின் விழாவாகக் கொண்டாடப் பணித்தார்.

புனித லூயிஸ் தே மான்போர்ட், "செபமாலை செபிக்கும்போது நமக்கு வரும் தீவினைகள் முற்றிலும் நீங்கும். இறையருள் மேலும் மேலும் பெருகும்" என்கிறார். இத்தகைய வல்லமை நிறைந்த செபமாலையை நாம் தினமும் குடும்பத்தோடு செபித்து, தாய் மரியின் அன்பையும், அருளையும் பெறுவோம்.!



**ரோஸ் சேவியர்**

# கனிகள் இனிப்பும் கசப்பும் – ஒரே மரத்தில்



"அமெரிக்கா சிக்காகோவிலிருந்து பேசுகிறேன்."

"சொல்லுங்கம்மா."

"நான் யாரு பேசுகிறேன் என்று தெரியுமா?

"தெரியாது, எப்படியும் சொல்வீர்கள் அல்லவா?

"உங்கள் பக்கத்து வீட்டு பிரவீனாவின் அக்கா சுவேதா பேசுகிறேன்.

"அப்படியா? ரொம்ப சந்தோஷம். ஆனால், அவங்க மும்பைக்கு மாற்றலாகிச் சென்று விட்டார்களே?

"ஆமாம், தெரியும். நான் அவளது அக்கா தானே!

"சரி. சொல்லுங்க, என்ன விஷயம்?

"வந்து உங்களிடம் ஒரு உதவி கேட்கிறேன்.

"முடிந்தால் செய்கிறேன்.

"எனது மூத்த அக்கா கலையரசிக்கு நாளை எண்பதாவது பிறந்தநாள்.

"முழுப்பெயர் ஜெபமாலை கலையரசியா?

"அட, எப்படித் தெரியும் உங்களுக்கு?

"நாளை அக்டோபர் 7ஆம் தேதி, புனித ஜெபமாலை அன்னை திருவிழா அல்லவா, அதனால்தான் கேட்டேன்.

"வழக்கமாக அங்கே உள்ள எங்கள் குடும்ப நண்பர் ஜெலஸ்டின்தான் உதவி செய்வார். அவர் இப்ப மகள் வீட்டுக்கு ஜெர்மன் போயிருக்கிறார்.

"அப்படியா?

"என் தங்கையிடம் இதுபோன்று சேவை செய்யக்கூடிய நபர் இருந்தால் கூறுமாறுக் கேட்டிருந்தேன். அவள்தான் உங்களைப் பற்றி சொல்லி, கேட்டுப் பாருங்கள் என்றும் சொன்னாள். அதனால்தான். .உங்களுக்கு ஒன்றும் தொந்திரவு இல்லையே?

"ஆங், சொல்லுங்கள்.

"வந்து, இருவரும் தனியாக இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கி நாளை காலை 10.00 மணிக்கு அவர்களிடம் கொடுத்தால் நலமாக இருக்கும். செலவுகள் போக்குவரத்துச் செலவுகள் உட்பட குறிப்பிடுங்கள், நான் ஜிபேயில் அனுப்பிவிடுகிறேன்.

"சரிம்மா, அப்படியே செய்கிறேன்.

சுவேதாம்மா சொன்ன பொருள்களுடன் அந்த வீட்டை அடைந்தேன். வாசலில் அவரது இளையமகள் யாரு எவரு என்று கேட்டபின் உள்ளே அனுமதித்தார். சற்று வயதானவர் "வாங்க" என்று அழைத்தார். உள்ளேயிருந்து பிறந்தநாள் பேபி வந்தார். அவரிடம் பொருள்களைச் சொல்லிக் கொடுத்துவிட்டு இருவரிடமும் ஆசீர்

பெற்றுத் திரும்பினேன். அப்போதுதான் தற்செயலாக அந்தத் திருமண புகைப்படம் கண்ணில் பட்டது.

அதை நான் பார்ப்பதைப் புரிந்துகொண்ட பெண்மணி - "அது என் மூத்த மகனின் திருமண புகைப்படம்" என்றார்.

அதைப் பார்த்ததும் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது, ஆனாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அங்கிருந்து திரும்பினேன்.

புகைப்படத்தில் இருக்கும் அவரது மூத்த மகன், அந்த ஊரிலேயே வேறு பகுதியில் குடியிருப்பவர். ஆனால், அவரோ அல்லது வெளியூரிலிருந்து அலுவலக வேலையாக வந்திருந்த மகளோ இருந்தும், அமெரிக்காவிலிருந்து அந்த இளைய சகோதரி இவ்வளவு ஏற்பாடு செய்வானேன் என்ற கேள்வி என்னுள்ளத்தில் எழுந்தது.

அவரது மூத்த மகன் என் பக்கத்து வீட்டில் குடியிருந்த அவரது சித்தி பிரவீனா வீட்டு பேரனின் புதுநன்மை திருப்பலியில் அறிமுகமானார். பிரவீனாம்மா என்னிடம் வாசகம் வாசிக்குமாறு கேட்டுக் கொண்டதால் நானும் அதற்குத் தயாராக இருந்தேன். அப்போது இவர் என்னிடம் வந்து, தான் வாசகம் வாசிப்பதாகக் கேட்டு வாங்கிக் கொண்டார். அவ்வளவு ஆர்வமாக சித்தியின் இல்ல விழாவில் உரிமை எடுத்துக் கொண்டவர் தன் தாயின் பிறந்த நாளுக்கு முக்கியத்துவம் கொடுக்காதது ஏன்?

மும்பையிலிருந்த அவரது சித்தி அலைபேசியில் வந்தார். ரொம்ப நன்றி தம்பி என்றவர், சிக்காகோ அக்கா ஸ்பெஷலாக நன்றி சொல்லச் சொன்னார்கள் என்றும் கூறினார். பெற்றுக்கொண்ட அக்கா முன்பைவிட பொருள்கள் சிறப்பாக பிறந்தநாள் கேக் பெயருடன் ஜோடனை செய்துள்ளதைக் குறிப்பிட்டுள்ளார்.

அப்போது புகைப்படத்தில் இருந்தவரைப் பற்றிக் கூறினேன்.

என்ன செய்வது? திருமணத் திருப்பலியில் **இதனால், கணவர் தம் தாய் தந்தையரை விட்டுவிட்டு தம் மனைவியுடன் ஒன்றித்திருப்பார்** என்று எபேசியர் 5:31 இறைவார்த்தை வருகிறதே. அதனால் ,மகன் அப்பா, அம்மாவிடம் ஒட்டவிடுவதில்லை. இது எல்லா குடும்பத்திலும் நடைபெறுவதுதான் என்பதால் யாரும் அதைக் கண்டுகொள்வதில்லை.



ம. வெனான்சியுஸ்



# பனிமய சாட்சியம்

பனிமய சாட்சியம் : 107

**சைலஜா மேரி, தூத்துக்குடி**

எனது பெயர் மு. சைலஜா மேரி. கடந்த ஜூலை மாதம் எனது தங்கை கணவர் சுப்ரமணியன் விபத்துக்குள்ளாகி அடிபட்டு தீவிரசிகிச்சைப் பிரிவில் இருந்து மீண்டு வந்துள்ளார்கள். பனிமய மாதா எனது வேண்டுதலைக் கேட்டு, என் கண்ணீருக்கு பதிலளித்தார். சுப்ரமணியன் அவர்கள் உடல்நிலை நன்கு சரியாகி, நல்லமுறையில் மருத்துவமனையில் இருந்து வெளியேற்றம் ஆகி உள்ளார். மாதாவுக்கே நன்றி! மரியே வாழ்க! இயேசுவுக்கே புகழ்!

# மகிழ்வைத் தேடி...



'கவலையில்லாத மனிதனின் சட்டை' என்ற பொருள்படும் ஒரு ஆங்கிலக் கவிதையில் ஒரு அழகான கதை கூறப் பட்டுள்ளது. ஒரு அரசன் தனக்கு ஏதோ நோயுள்ளது என மனதிற்குள் உணர்ந்தான். அதனால் அரசவைக்கு செல்லாமல் தனது தனி அறைக்குள் சென்று, கதவுகளையும், ஜன்னல்களையும் மூடிவிட்டு தனியே அமர்ந்து கொண்டான். அவனது நோயை அவனால் என்னவென்று கண்டுபிடிக்க முடியவில்லை.

எனவே நாடெங்கிலும் உள்ள மருத்துவர்களை அழைத்து வந்து, தனது நோயைக் குணப்படுத்தும் மருத்துவருக்குப் பரிசும், குணப்படுத்த முடியாதவருக்குத் தண்டனையும் தருவதாக முரசறைந்தான். பலரும் வந்து குணப்படுத்த முடியவில்லை. இரவும், பகலும் பல புத்தகங்களைப் படித்துப் படித்து ஆராய்ந்து உடல் மெலிந்து போன ஒரு மருத்துவருக்கும் அவர் நோயைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இறுதியாக ஒரு மருத்துவர் வந்தார். அவர் நோயாளிகள் தரும் பணத்தால் நன்றாகக் கொழுத்துப் போய் இருந்தார். அவர் நோயாளிகளைப் பற்றி அதிகம் அக்கறைப் படமாட்டார். மருந்து கொடுப்பார். குணமாகினால் நோயாளி பணம் கொடுப்பார். குணமாகாமல் அவர் இறந்துவிட்டால் அவரது வாரிசுகள் சொத்து கிடைத்ததனால் இரு மடங்காக இவருக்குப் பணம் தருவார்கள்.

அப்படிப்பட்ட மருத்துவர், அரசரிடம் வந்தார். மற்றவர்கள் அரசருக்கு நோய் எதுவுமில்லை என்று சொன்ன நிலையில் இவரோ, அரசருக்கு ஒரு நோய் வந்துள்ளது. அவர் கவலையில்லாத ஒரு மனிதனின் சட்டையை ஒருநாள் அணிந்திருந்தால் குணமாகிவிடுவார் என்றார்.

காவலர்கள் நாடெங்கிலும்போய் கவலையில்லாத மனிதனைத் தேடினார்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு கவலை. ஒருவன் உணவு இல்லை என்று கவலைப்பட்டான். மற்றவன் உணவு இருந்தும் சாப்பிட முடியவில்லை என்று கவலைப்பட்டான். ஒருவன் குழந்தை இல்லையே எனக் கவலைப்பட்டான். மற்றவன் நிறைய குழந்தைகளை வளர்க்க முடியவில்லையே எனக் கவலைப்பட்டான். ஒருவர் மனைவி இறந்துவிட்டாள் எனக் கவலைப்பட்டான். இன்னொருவன் மனைவி இன்னும் சாகாமல் என்னைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறாளே எனக் கவலைப் பட்டான். இப்படிப் பலருக்கும் பல கவலை.

இறுதியில் சாலையோரம் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த ஒருவன் மிகவும் சந்தோஷமாக இருந்ததைக் கண்டார்கள். அவனுக்கு குடும்பம், சொத்து, சுகம் எதுவுமில்லை. சந்தோஷமாக இருந்தான். அவன்தான் தாங்கள் தேடிய மனிதன் என்று அவனிடம் அவன் சட்டையை ஒருநாள் இரவலாகக் கேட்டார்கள். அவனோ கலகலவென அடக்கமுடியாமல் சிரித்தவாறு தனக்கு சட்டையே இல்லை எனச் சொல்லிக் காவலர்களை அனுப்பிவிட்டான். காவலர்கள் அரசரிடம் நடந்தவற்றைக் கூறினார்கள்.

அரசர், தனது ஆட்சியில் மக்கள் கவலை கொண்டவர்களாக இருக்கிறார்கள். கவலை இல்லாதவருக்கு அடிப்படைத் தேவைகள் இல்லை என்பதை உணர்ந்தார். தனக்கு நோய் எதுவுமில்லை. மனக்குழப்பம்தான் என உணரச் செய்த மருத்துவருக்குப் பரிசுகள் அளித்தார். மருத்துவரின் அறிவுரையின்படி ஜன்னல் கதவுகளைத் திறந்து, இயற்கைக் காற்றினை அறைக்குள் வரச் செய்தார். தன் மக்களின் மகிழ்ச்சியில் அக்கறை கொண்டு பல நலத் திட்டங்களை உண்டாக்கி நன்மதிப்பைப் பெற்று, தானும், மக்களோடு சேர்ந்து மகிழ்ச்சியாக இருந்தார்.

ஆம்! 'மகிழ்வு' என்பது நமக்குள்தான் இருக்கிறது. அதனை நாம் வெளியே தேடிச் செல்ல வேண்டியதில்லை. நம் சொல், சிந்தனை, செயல்களில் தூய்மை இருந்தால் நாம் மகிழ்வுடன் வாழலாம். நாம் அவற்றைத் தூய்மையாக வைத்திருக்க இறைவனை சார்ந்திருக்க வேண்டும். நம் ஆன்மீக வாழ்வுதான் தீமைகள் நம்மை அணுக விடாமல் நம்மை மகிழ்ச்சியாக வாழ வழி வகுக்கும். இறையன்பு, நம்மைப் பிறரன்பில் வளர வைக்கும். இறைவிழுமியங்களைக் கடைப்பிடித்து வாழும்போது பிறரில் நம் நன்மைத்தனம் வளரும். நாம் பிறருக்கு உதவும்போது நம் மகிழ்ச்சி இரட்டிப்பாகும்.

"எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள். இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள். எல்லா சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள்" (தெச 5:16-18) என்ற இறைவாக்குகள் நம்மை இறைவனைச் சார்ந்திருக்கத் தூண்டுகின்றன. நாம் என்றும் மகிழ்ந்திருக்க, நமக்காகப் பரிந்துரைக்கும் தேவ அன்னையிடம் மன்றாடுவோம். மீட்பின் வரலாற்றைப் பிரதிபலிக்கும் செபமாலை சொல்வோம். சிறப்பாக அக்டோபர் மாதத்தில் செபமாலைக்காக ஒப்புக் கொடுக்கப்பட்ட மாதத்தில் தினமும் செபமாலை சொல்வோம். என்றென்றும் மகிழ்வைப் பெறுவோம்.



**ஜோ. ரெஜினா கிரகோரி**

# வாடாத மலர்கள்

**பல** ஆண்டுகளுக்கு முன்பு, **சீனா** தேசத்திலே கிறிஸ்தவர்கள் **மதப்** பிரச்சாரம் செய்கிறார்கள் என்று சொல்லி, கிறிஸ்தவர்களை சிதறடித்து, அவர்களை கைது செய்தார்கள்.

ஆனால் ஒருவர் மட்டும் பிடிபடாமல் இரகசியமாய் ஊழியம் செய்துகொண்டே வந்தார். ஒருநாள் இரகசிய போலீசார் அதை அறிந்து, அவருடைய வீட்டுக்குள் புகுந்து அவரை கைது செய்தார்கள்.

அவரை கைது செய்து கொண்டு போவதைக் கண்ட அவரது சிறிய மகன், "அப்பா, அப்பா" என்று அழுதுகொண்டு தெருவிற்கு ஓடி வந்தான். அந்தக் குழந்தையைக் கண்ட போலீசார் அவனையும் சேர்த்து போலீஸ் வண்டியில் ஏற்றினார்கள்.

ஸ்டேஷனுக்கு வந்ததும் அந்தப் போதகரை, 'அடி அடி' என்று அடித்து அவரோடு உள்ள விசுவாசிகள் யார்? உடன் இருப்பவர்கள் யார்? என்கிற விபரங்களைக் கேட்டார்கள். அவர் கொடிய சித்திரவதைகளை ஏற்றபோதிலும் இயேசுவை மறுதலிக்கவுமில்லை. மற்றவர்களைக் காட்டிக் கொடுக்கவுமில்லை.

ஆனால் அவரோ, "இயேசுவே நானும் உம்முடைய பாதையில் சென்று கொண்டிருக்கிறேன்" என்று சிலுவையை நோக்கிப் பார்த்தார். மீண்டும் அந்த போலீசார் "நீ அவர்களைக் காட்டிக் கொடுக்காவிட்டால், உன்னுடைய மகனை உயிரோடு புதைத்து விடுவோம் என்று சொல்லி, ஒரு நீளமான பூந்தோட்டியை எடுத்துக் கொண்டு வந்து அவர் மகனை அந்தத் தொட்டிக்குள் வைத்து கொஞ்சம் கொஞ்சமாக மண்ணைப் போட்டு மூட ஆரம்பித்தார்கள். அவரைப் பார்த்து, "நீர் இயேசுவை மறுதலித்தால் உனக்கும் விடுதலை, உன் மகனையும் உயிரோடு அழைத்துக் கொண்டுப் போகலாம்" என்று சொன்னார்கள். அவரோ மறுத்துவிட்டார்.

அந்தக் குழந்தை அழுதது. அதன் கண்களிலே மணல் விழுந்து கொண்டிருந்தது. அந்தக் கண்கள் தன் தகப்பனாரை ஏக்கத்தோடு நோக்கிப் பார்த்தது, ஆனால் அவரோ இயேசுவை மறுதலியாமல் உறுதியாய் நின்றார். முடிவில் அந்தக் குழந்தை முழுவதும் மண்ணால் மூடப்பட்டு உயிரோடு புதைக்கப்பட்டது. அந்த போலீஸ் அதிகாரி, சிறுவனை புதைத்த அந்தத் தொட்டியில், சில ரோஜா செடிகளைக் கொண்டு வந்து நட்டு, தண்ணீர் ஊற்றினார். அவரோ சிறையில் அடைக்கப்பட்டார்.

சில மாதங்கள் கழிந்தன. அவரை மறுபடியும் விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தனர். இப்பொழுது தன் மகனைப் புதைத்த அந்தத் தொட்டியில் அழகான சிவப்பு ரோஜா மலர்கள் பூத்துக் குலுங்கி காற்றில் அசைவாடுவதைக் கண்டார். எத்தனை நறுமணமான வாசனையை அந்த ரோஜா மலர்கள் பரிமளித்தது. அந்த அதிகாரி, அவரைப் பார்த்து, "கிறிஸ்தவர்கள் பூமிக்கு உப்பாய் மட்டுமல்ல, நல்ல உரமாகவும் இருக்கிறார்கள். உமது மகன் எவ்வளவு நல்ல உரம் பார்த்தீரா?" என்று கேட்டார்.

அவர் மீண்டும் அந்த மலர்களைப் பார்த்தார். அந்த மலர்களின் மகிழ்ச்சிக்கு கீழே இருக்கிற தன்னுடைய மகனுடைய வேதனையான மரணத்தை நினைத்தார். கல்வாரி அன்பும் இயேசுவின் ஆத்தும வருத்தமும் அவருடைய கண்களில் பளிச்சிட்டது. ஒட்டி உலர்ந்த அவருடைய கண்களில் இருந்து கண்ணீர் தாரைதாரையாக அந்த மலர்களின் மேல் விழுந்தது

அன்பார்ந்தவர்களே, இன்று நாம் சந்தோஷத்தில் நிரம்பி பல பாடல்களைப் பாடுகிறோம். இந்த மகிழ்ச்சிக்கு ஆழத்தில் ஒரு தியாகம் இருக்கிறது. ஆத்தும வருத்தம் இருக்கிறது. அந்த தியாகத்தின் மேல்தான் கிறிஸ்தவ மார்க்கம் நின்றுகொண்டிருக்கிறது.



சுரேஷ்



# தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம், தூத்துக்குடி



## முழு இரவு தொடர் செபமாலை - 2024

### 12-10-2024 சனிக்கிழமை

| | | |
|---|---|---|
| 10.00 – 10.10 | நற்கருணை எழுந்தேற்றம்,<br>தொடக்க உரை - அருள்பணி. ஸ்டார்வின் | |
| 10.10 – 10.30 | மகிழ்ச்சி நிறை மறை உண்மைகள்<br>அருள்சகோதரிகள் | 1 |
| 10.30 – 11.00 | ஒளியின் மறை உண்மைகள்<br>லயன்ஸ் டவுண் சகாய மாதா பங்கு மக்கள் | 2 |
| 11.00 – 11.30 | துயர் நிறை மறை உண்மைகள்<br>திரு இதயங்களின் பேராலயப் பங்கு மக்கள் | 3 |
| 11.30 – 12.00 | மகிமை நிறை மறை உண்மைகள்<br>குருஸ்புரம் புனித சூசையப்பர் பங்கு மக்கள் | 4 |
| 12.00 – 12.20 | மகிழ்ச்சி நிறை மறை உண்மைகள்<br>அன்னை வேளாங்கண்ணி ஆலயம், ஸ்டேட் பாங்க் காலனி | 5 |
| 12.20 – 12.30 | மறையுரை - அருள்பணி. பாலன் | |
| 12.30 – 01.00 | செபமாலைப் பவனி (அமலோற்பவ மாதா வாலிபர் சபை)<br>ஒளியின் மறை உண்மைகள் | 6 |
| 01.00 – 01.30 | துயர் நிறை மறை உண்மைகள்<br>புனித தோமையார் கோவில் பங்கு மக்கள் | 7 |
| 01.30 – 02.00 | மகிமை நிறை மறை உண்மைகள்<br>அண்ணாநகர் மிக்கேல் அதிதூதர் பங்கு மக்கள் | 8 |
| 02.00 – 02.30 | மகிழ்ச்சி நிறை மறை உண்மைகள்<br>புனித சார்லஸ் கோவில் பங்கு மக்கள் | 9 |
| 02.30 – 02.40 | மரியன்னைப் பாடல்கள் | |
| 02.40 – 03.00 | ஒளியின் மறை உண்மைகள்<br>தூத்துக்குடி நகர மரியாயின் சேனையினர் | 10 |
| 03.00 – 03.20 | துயர் நிறை மறை உண்மைகள்<br>தூத்துக்குடி மாநகர வின்செந்தியர்கள் | 11 |
| 03.20 – 03.40 | மகிமை நிறை மறை உண்மைகள்<br>பொம்பெயி செபமாலை மாதா சபையினர் | 12 |
| 03.40 – 04.00 | மகிழ்ச்சி நிறை மறை உண்மைகள்<br>மரியாயின் இயக்கம் | 13 |
| 04.00 – 04.20 | ஒளியின் மறை உண்மைகள்<br>தூய பனிமய அன்னை பேராலயப் பங்கு மக்கள் | 14 |
| 04.20 – 04.50 | பிரார்த்தனை, பாவிகளுக்கு அடைக்கலமே, குடும்பங்களை<br>ஒப்புக்கொடுக்கும் ஜெபம் - அமலோற்பவ மாதா வாலிபர் சபையினர் | |
| 04.50 – 05.00 | திருப்பலிக்கான தயாரிப்பு - ஒப்புரவு அருள்சாதனம் | |
| 05.00 – 05.45 | திருப்பலி - அருள்பணி. ஸ்டார்வின் | |

# விவிலியப் போட்டி 114

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

**மத்தேயு நற்செய்தி : அதிகாரம் 11–20 வரை**

**ஓரிரு வார்த்தைகளில் விடையளி :**

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

1. எல்லா விதைகளையும் விட சிறியது எது?
2. “ஐயா, தாவீதின் மகனே எனக்கு இரங்கும்” - என்று சொன்ன பெண் யார்?
3. ஐந்து மணிக்கு வந்தவர்கள் எத்தனை தெனாரியம் பெற்றுக் கொண்டார்கள்?
4. ஓய்வு நாளும் யாருக்கு கட்டுப்பட்டது?
5. குறுநில மன்னன் யார்?
6. இது வேண்டாம், இப்படி உமக்கு நடக்கவே கூடாது என்றவர் யார்?
7. எத்தனை நாட்களுக்கு பின்பு இயேசு தோற்றம் மாறினார்?
8. விண்ணரசில் மிகப் பெரியவர் யார்?
9. யார் விண்ணரசில் புகுவது கடினம்?
10. பேதுரு என்னும் கிரேக்கச் சொல்லுக்கு என்ன பொருள்?

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.10.2024**

# விவிலியப் போட்டி 113 செப்டம்பர் 2024 விடைக்குறிப்புகள்

**மத்தேயு நற்செய்தி : அதிகாரம் 1–10 வரை**

| | | |
|---|---|---|
| 1. | பேய், பேச்சிழந்தவன் | மத் 9:33 |
| 2. | புறா | மத் 10:16 |
| 3. | சரி | மத் 5:39 |
| 4. | நான்கு (4) (தாமார், இராகாபு, ரூத், மரியா) | மத் 1:3,5,16 |
| 5. | தவறு | மத் 4:10 |
| 6. | திருமுழுக்கு யோவான் | மத் 3:13 |
| 7. | சரி | மத் 5:23 |
| 8. | விண்ணுலகில் | மத் 6:20 |
| 9. | தவறு | மத் 7:13 |
| 10. | கப்பர்நாகும் | மத் 8:5 |

**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 139**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 97**

**விடை எழுதிய அன்பியங்கள் : 26**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. திவ்யபாலன்அன்பியம் **பிரின்சி**
2. பாத்திமா மாதாஅன்பியம் **ரீனா ராஜா**
3. இரக்கத்தின் மாதா அன்பியம் **பாப்டிஸ்டா**
4. திருச்சிலுவை அன்பியம் **ஜஸ்டின் ஸ்நோகுளோரி**

## பாராட்டுக்குரியவர்கள் : 93

**அந்தோனியார் அன்பியம்**
5. லூக்காஸ் சகாயம்
6. சரோஜா
7. பிருந்தா
8. ரீனா மொராய்ஸ்
9. ஜெயா

**அன்னை தெரசா**
10. ஜூலியட்ஸ் ரூபி
11. பெற்றி சூசையா
12. செல்வராணி
13. ரெயிசா சுஜய்
14. சுகன் மோனிஷா

**அன்னை வேளாங்கன்னி**
15. டென்சி
16. ஆரோன் ஷாரோன்
17. நான்சி

**கிறிஸ்தரசர்**
18. லூரட் வசந்த்
19. செலஸ்கி கிளமென்ட்
20. ஜூலியட் சாவியோ
21. ஜெகன் பெமினா

**தஸ்நேவிஸ் மாதா அன்பியம்**
எவருமில்லை

**திவ்யபாலன் அன்பியம்**
22. சகாயராணிதன்ராஜ்

**பாத்திமா மாதா**
23. ஜெசிந்தா கான்ஸ்டன்
24. ஆல்வின் அனு
25. ஜெனிற்றா மைக்கேல்
26. ஸ்டெபிரீகன்

**இரக்கத்தின் மாதா**
27. பிரைட்டன் ஜெரோபின்
28. இருதயம்மாள் கொன்சால்
29. சித்ரா மோத்தா
30. செல்விபுரோ
31. சேவியரம்மாள் கோமஸ்

**ஜெபமாலை மாதா**
32. சகாயம்மாள் பெனடிக்ட்

**ஜூடு அன்பியம்**
33. அந்தோனிசாமி
34. ட்ரைபேனா
35. டெரன்சியா அரிஸ்டோ
36. அலெக்சான்ட்ரியா
இன்ஃபா

**காவல் தூதர்**
37. வெனிட்டாள்
38. எலிஜா இம்மானுவேல்
39. ஜூலியஸ் தல்மேதா
40. ஜெயா அகஸ்டின்
41. அல்பின்
42. சாந்தி ஆல்ட்ரின்
43. ஜோ ட்ரினிஷா
44. ரஸ்கின் வசந்தா

**குழந்தை தெரசா**
45. கிறிஸ்டி லிஸ்டன்
46. பெனி மொறாயிஸ்
47. பெர்லி டென்சன்

**குழந்தை இயேசு**
48. மோனிகா செபாஸ்டின்
49. எமல்டா
50. பிரான்சிஸ் வாஸ்

**மணல் மாதா**
51. ரொசாரிகோமஸ்

**லூர்து மாதா**
52. ரோஸ்லின் தாமஸ்
53. சாண்டினா
54. ஆலிவர் வி. ராயன்
55. ஃபிலோ
56. ரஜூலா ஜான்போஸ்கோ
57. ஜெனோ சேவியர்

**மிக்கேல் அதிதூதர்**
58. ஜோசபின் பர்னாந்து
59. வினோ அந்தோணி

**பனிமய அன்பியம்**
60. மெர்சி
61. ராணிபர்னான்டஸ்

**பவுலடியார்**
62. ராஜா ரோஸ்லின்
63. லீமாரோஸ் ஜாய்
64. ஒபிலியா ஜான்சன்

**பரிபூரண மாதா**
65. ஜெனிஷா
66. மெடோனா
67. சப்னா கினிஸ்டன்
68. ஷெர்லின் ஜெனிஸ்

**பொம்பெயி மாதா**
69. மேத்யூ கர்டோசா
70. டிஃபானி அண்டோ
71. ஜான்சிராணி அமல்ராஜ்
72. லூடா கான்ஸ்டன்
73. இம்மாக்குலேட் சதீஷ்
74. மரிய அல்சி

**இராயப்பர்**
75. டெய்ஸி
76. ஒபிலியா தாமஸ்

**சவேரியார்**
77. டெலிலா அமலன்
78. சகாயம் அண்டன்
79. அனுஷ்யா பீட்டர்
80. ஜான்சி ஜெயகுமார்
81. ரூபா மனுவேல்
82. ஜோர்னல் ஜென்ஸி

**செபஸ்தியார்**
83. அந்தோனியம்மாள் டென்சிங்
84. ஜெசிலா சேவியர்
85. பிரவீனா

**சிந்தாத்திரை மாதா**
86. நேசம்
87. ஜூடி ஆரோக்கியராஜ்
88. ராஜி ஜஸ்டின்
89. ஜெஃப்ரினா ராயன்

**சிறுமலர் அன்பியம்**
90. விஜி சகாயராஜ்
91. எல்சிட்டாஆனந்த்
92. செலஸ்டின்

**சூசையப்பர்**
93. கிறிஸ் ரீஜோ
94. ஹேமலதா
95. மென்ஸி
96. மோனிஷா

**திருச்சிலுவை**
எவருமில்லை

**வியாகுல மாதா**
97. லூர்து லினட்

## பிற பங்குகளிலிருந்து விடை எழுதியவர்கள் : 42

### பரிசு பெறுபவர்கள் : 4

98. திருச்சி — மோனிட்டா கிறிஸ்டி
99. சென்னை — ரெஜினா கிரகோரி
100. தூத்துக்குடி குரூஸ்புரம் — ஆசீர்வாதம்
101. தூத்துக்குடி லயன்ஸ் டவுண் சகாய மாதா — ஷெரினா

### பாராட்டுக்குரியவர்கள் : 38

**ஆலந்தலை**
102. தனராஜ் பொன்சேகா
103. சகாயராணி

**திண்டுக்கல்**
104. ரோசாலி

**ஆறுமுகநேரி**
105. ஜெயராணி
106. தொம்மை அந்தோணி

**ஏரல்**
107. ஜாய்ஸ் ரத்தினம்

**புதியம்புத்தூர்**
108. ஹெலன் அன்னமணி

**சென்னை**
109. பிரேமா குணசீலன்
110. கமலஜோதி ஜெயசீலன்
111. கனிஷியஸ் விஷால்

**திருச்சி**
112. ஜெக ரெட்சகன்

**வடக்குத்து**
113. ஹென்றிதாஸ்

**கொடைக்கானல்**
114. ஜெஸிந்தாமார்டின்

**கயத்தாறு**
115. அமல்ராஜ்

**அலங்காரதட்டு**
116. மேரிரோஸ்லின்

**பேட்டை**
117. ஹெலனிட்டா

**கோவளம்**
118. சரோபின் ஜோசப்

**தூத்துக்குடி நகர பங்குகள்**

**திரு இதயங்களின் பேராலயம்**
119. ரிமோல்டா
120. பீட்டர் ஜெயந்தி
121. ரமோலாபர்னாந்து
122. மேரி கிரேட்டா
123. ரமோலா கமிலஸ்

**குருஸ்புரம்**
124. பௌவுசி ஜோ மைக்கேல்
125. பிளசி செல்வராஜ்
126. ஜான்சி மெண்டிஸ்

**லயன்ஸ் டவுண் சகாயமாதா**
127. சகாயம்
128. டோமினிக்

**யூதா ததேயு கோவில்**
129. ரோஸ் சேவியர்

**காந்தி நகர்**
130. ரியாலினோ
131. சாந்தினி

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
132. செக்கரியா சாமுவேல்

**இரத்னபுரம் சவேரியார்கோவில்**
133. வெர்ஜின்

**அந்தோனியார்கோவில்**
134. வயோலா ஜான்சன்
135. மென்சிலா லொயோலா
136. ரீடன்
137. மார்னிங் ஸ்டார்
138. இருதயம்மாள் கபிரியேல்

**பாத்திமா நகர்**
139. மேரிஹேம்;லின்

## உங்கள் கவனத்துக்கு

**பனிமய அன்னைப் பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளைத் தாளில் எழுதி பங்கு அலுவலகத்துக்கு யார் மூலமாவது கொடுத்து விடுங்கள்.**
**ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும்.**
**மறவாமல் குடும்ப அட்டை எண்ணையும் எழுதுங்கள்.**
**வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம்.**



**வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.**

**63796 41209** அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 157**



**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 139**

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 4)

## அக்டோபர் - 2024

| | |
|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : அருள்பணி. ஸ்டார்வின் |
| உதவிப் பங்குத் தந்தை | : அருள்பணி. பாலன் |
| களப் பணியாளர் | : சகோதரர் தினகரன் |
| பங்கு அலுவலகம் | : 0461 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | சனிக் கிழமைகளில் | | ஞாயிற்றுக் கிழமைகளில் | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | **காலை 5.00, 6.30, 8.00** | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | **காலை 9.30** | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | **மாலை 5.30** | திருப்பலி |
| | மாலை 6.30 | செபமாலை நவநாள், நற்கருணை ஆசீர் | **மாலை 6.30** | செபமாலை, நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** *திங்கள் முதல் வெள்ளிவரை மாலை 06.15–06.45*

*சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00*

- ✓ *திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (திருவருகைக் காலம், தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)*

- ✓ *புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (திருவருகைக் காலம், தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).*
- ✓ *புதுநன்மை அருள்சாதனம் பெற விரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.*

- ✓ *திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00 மணிக்கு அனுமதி உண்டு. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.*
- ✓ *ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30*
- ✓ *அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்*

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம் :** *காலை 10.00 மணி - 01.00 மணி*
  *மாலை 04.00 மணி - 05.30 மணி*
- ✓ *இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.*
- ✓ *நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.*

## பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

01. **பேராலயப் பங்குமேய்ப்புப் பணிப் பேரவையின் நிதிக்குழுக் கூட்டம்** 28.08.2024 புதன்கிழமை மாலை 05.30 மணிக்கும், செயற்குழுக் கூட்டம் மாலை 06.00 மணிக்கும் நேவிஸ் அரங்கத்தில் நடைபெற்றது.

02. **பேராலயப் பங்குமேய்ப்புப் பணிப் பேரவையின் பொதுக்குழுக் கூட்டம்** 29.08.2024 வியாழக்கிழமைமாலை 07.00 மணிக்கு அந்தோனியார் அரங்கத்தில் நடைபெற்றது.

03. செப்டம்பர் மாதம் இரண்டாவது வாரத்திலிருந்து நமது பங்கில் ஒவ்வொரு வாரமும் புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் **அன்பியக் கூட்டங்கள்** நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

04. திருச்சிலுவைச் சிற்றாலயத்தில் **திருச்சிலுவை மகிமைப் பெருவிழா** கடந்த 12.09.2024 வியாழக்கிழமை மாலை 05.30 மணிக்கு அருள்பணி. இசிதோர் அவர்களின் தலைமையில் திருப்பலியுடன், தொடர்ந்து கொடியேற்றமும் நடைபெற்றன. 13.09.2024 வெள்ளிக்கிழமைமாலை 05.30 மணிக்கு அருள்பணி. ரெயோசில் பெப்பி அவர்களின் தலைமையில் திருப்பலியும், மாலை ஆராதனையும் நடைபெற்றன. மறுநாள் **14.09.2024 சனிக்கிழமை** அன்று காலை 05.30 மணிக்குப் பேராலய வளாகத்திலுள்ள திருச்சிலுவைக் குருசடியில் திருவிழாத் திருப்பலி நடைபெற்றது. திருச்சிலுவை சிற்றாலயத்தில் **மாலை 05.30 மணிக்கு** அருள்பணி. ரஞ்சித் கர்டோசா அவர்களின் தலைமையில் திருவிழாத்; திருப்பலியும்,தொடர்ந்து கொடியிறக்கமும் நடைபெற்றன.

05. 25.08.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று அனைத்து திருப்பலிகளிலும் பெறப்பட்ட காணிக்கை **ரூபாய் இரண்டு லட்சம்** மறைமாவட்டத்திற்கு வயநாட்டு மக்களுக்காக வழங்கப்பட்டது.

06. பனிமய அன்னையின் பெருவிழாவின் போது காணிக்கையாக வந்த நோட்டுகள் பள்ளிகளுக்கும், வின்சென்ட் தே பவுல் சபைக்கும் வழங்கப்பட்டன.

07. **அன்னை மரியாவின் பிறப்பு விழா**வை முன்னிட்டு 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை மற்றும் மாலைத் திருப்பலி முடிந்ததும், கேக் வெட்டப்பட்டு, வந்திருந்த அனைவருக்கும் பரிமாறப்பட்டது.

08. விவிலிய மாதத்தை முன்னிட்டு ஞாயிறு மறைக்கல்வி குழந்தைகளுக்கு செப்டம்பர் மாதத்தில் வாரந்தோறும் ஒரு போட்டி ஞாயிறு மறைக்கல்வி வகுப்புகளின் போது நடத்தப்பட்டது.

09. விவிலிய மாதத்தை முன்னிட்டு நற்செய்தி நடுவத்திலிருந்து 100 கேள்விகள் அடங்கிய வினாத்தாள் பெறப்பட்டு தூய பனிமய அன்னை பேராலயப் பங்கு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

10. பனிமய மாதா பங்கு சபை உறுப்பினர்களுக்கான கூட்டம் 15.09.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 04.30 மணிக்கு அந்தோனியார் அரங்கத்தின் கீழ் தளத்தில் நடைபெற்றது.

11. 15.09.2024 ஞாயிற்றுக்கிழமை பேராலயத்தில் இரவு 07.00 மணிக்கு திருமணி ஆராதனை பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையினரால் வழிநடத்தப்பட்டது.

12. விவிலிய மாதத்தை முன்னிட்டு விவிலிய வினாடி வினா நேர்முகப் போட்டி 22.09.2024 ஞாயிற்றுக்கிழமை மதியம் 02.30 மணிக்கு அந்தோணியார் அரங்கத்தில் நடைபெற்றது.

13. 29.09.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 06.30 மணிக்கு வின்சென்ட் தே பவுல் சபையினர் மற்றும் ஞாயிறு மறைக்கல்வி மாணவ மாணவியர் ஆசிரியர்கள் திருப்பலியைச் சிறப்பித்தார்கள்.

14. விவிலிய மாதத்தில் பங்களாவிலும், ஞாயிறு மறைக்கல்வி வகுப்புகள் அளவிலும் நடத்தப்பட்ட அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்றவர்களுக்கு 29.09.2024 ஞாயிற்றுக்கிழமை மாலையில் திவ்ய நற்கருணை ஆசிருக்குப் பின் அந்தோனியார் அரங்கத்தில் நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளின் போது பரிசுகள் வழங்கப்பட்டன.

## பங்கில் நிகழ்ந்தவை



### *வரவேற்கிறோம்*

### 1. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 9. | ஜூவானிட் அனாயா | அந்தோணி - ப்ரீத்தி | 01.09.2024 | அந்தோணியார் |
| 10. | லூடஸ் டியாஷா | ரஜிபா - ஆஷிகா | 01.09.2024 | சிறுமலர் |
| 11. | கிறிஸ்டியானோ | தாம்சன் - ஜெமிஷா | 01.09.2024 | ஜெபமாலை மாதா |
| 12. | செல்வ நிவிஷா | வினோத் குமார் - சுகன்யா | 22.09.2024 | குழந்தை தெரசா |



### *வாழ்த்துகின்றோம்*

### 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 17. | பிரான்சிஸ் ஸ்டெஃபான் | ராஜா - ஜரின் | 01.09.2024 | வியாகுல மாதா |
| 18. | பீட்டர்சன் | ராஜா - ஜரின் | 01.09.2024 | வியாகுல மாதா |
| 19. | இன்ஃபென்ட் ரியான் | டெலஸ்பால் - டென்சி | 07.09.2024 | அன்னை வேளாங்கன்னி |



## ஆசி கூறுகின்றோம்

## 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 6. | ஜான் ஜெர்விஸ்- வினோன்சியா | பொம்பெய் மாதா | 01.09.2024 |
| 7. | ஸ்மித் பர்னான்டோ- ஆர்லின் | லூர்துமாதா | 05.09.2024 |
| 8. | கவின் -ஜோன்லின் | குழந்தை இயேசு | 06.09.2024 |
| 9. | மேக்டன் -கிளமென்சியா | பொம்பெய் மாதா | 16.09.2024 |
| 10. | ஜென்னிசன் மச்சாடோ அபிசப்னா | இரக்கத்தின் மாதா | 16.09.2024 |
| 11. | ஜூடு பீட்டர் அரவிந்த்- கீர்த்தனா | மணல் மாதா | 16.09.2024 |



## செபிக்கின்றோம்

## 4. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 11. | அன்டன் பீரீஸ் | லாசர் பீரீஸ் | 05.09.2024 | சிந்தாத்திரை |
| 12. | செல்வகுமார் | இருதயமேரி | 08.09.2024 | மிக்கேல் அதிதூதர் |

## நடைபெறவிருப்பவை

- ★ 04.10.2024 வெள்ளிக்கிழமை அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.
- ★ 05.10.2024 மாதத்தின் முதல் சனியன்று மாலைத் திருப்பலியும், **சப்பரப் பவனி**யும், தொடர்ந்து **நவநாள் வழிபாடு**ம் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூடியூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.
- ★ 12.10.2024 இரண்டாம் சனிக் கிழமையன்று பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையின் முன்னெடுப்பில் இரவு 10.00 மணி முதல் அதிகாலை 05.00 மணி வரை **முழு இரவு தொடர் செபமாலை** நடைபெறும்.

## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

- ❖ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும் வழங்கப்படுகின்றது. வரும் நாள்களில் **அன்பு உணவு** வழங்க விரும்புவோர் பங்கு அலுவலகத்தில் முன்பதிவு செய்யவும்.
- ❖ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசீர், திருப்பலி நடைபெறும்.

| எண் | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 14. | 01.10.2024 | செவ்வாய் | அருள்பணி. மார்ட்டின்குமார் | கொலை செய்யாதே |
| 15. | 08.10.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | விபசாரம் செய்யாதே |
| 16. | 15.10.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | களவு செய்யாதே |
| 17. | 22.10.2024 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | பொய்ச் சான்று சொல்லாதே |
| 18. | 29.10.2024 | செவ்வாய் | அருள்பணி. மார்ட்டின் குமார் | பிறர் மனைவிமீது ஆசை கொள்ளாதே |

*In Memoriam*

# 15th Death Anniversary



# G. GAITAN VAZ

**17.10.1951 - 13.10.2009**

*Your presence we miss, Your memories we treasure,*
*We walk on the trail you left behind.*
*Loving you always, forgetting you never.*

Deeply remembered by

**WIFE, SONS, DAUGHTERS-IN-LAW & GRANDSONS**

5/1, Manal Street, Tuticorin -1.

# முதலாமாண்டு நினைவு அஞ்சலி



மலர்ந்தது
01.09.1974

உதிர்ந்தது
02.10.2023

# R. ஸ்மைலா பர்னாந்து

இரக்கம் நிறைந்த இறைவா!
விண்ணரசில் நித்திய இறை ஒளியில்
இவ்வான்மா நிறைஅமைதி பெற
உம்மை மன்றாடுகிறோம்.

என்றும் உங்கள் நினைவோடு
அம்மா, கணவன், பிள்ளைகள்,
உடன்பிறப்புகள்
மற்றும்
குடும்பத்தினர்

2nd year remembrance

32nd year remembrance



# T. Celine Fernando

# A. Rozario Missier

| Birth | Death | Birth | Death |
| --- | --- | --- | --- |
| 05.06.1933 | 21.10.2022 | 06.10.1926 | 24.04.1992 |

### பிரிவால் துயருறும்

மகள் : ஈவ்லின் மிசியர்
மருமகன் : சேவியர் பர்ணாந்து
பேத்தி : Dr. ரீத்தி
பேத்தியின் கணவர் : Dr. சந்தீப்
பேரன்கள் : Ad. ஜோஸ்வின், காட்சன்
கொள்ளு பேரன்கள் :
அர்நவ், ராகவ்

# விண்ணக வாழ்வின்

## மூன்றாம் ஆண்டு அஞ்சலி

## ஆறாம் ஆண்டு அஞ்சலி

"வாழ்க்கைப் பயணத்தில் உம் விதிமுறைகள் எனக்குப் புகழ் பாக்களாய் உள்ளன" (திபா 119:54)

மண்ணில்
03.03.1943



விண்ணில்
07.05.2021

**A.பிரசாதராஜன் விக்டோரியா**

மண்ணில்
22.02.1949



விண்ணில்
17.12.2017

**I.அந்தோணி அல்போன்ஸா மார்கரெட் ஜெயதேவி பர்னாண்டோ**

### ஆத்துமத்திற்கான ஜெபம்

நெஞ்சுக்கும் மார்புக்கும் நிறைந்த சிலுவை, நீச பிசாசுகளை விரட்டும் சிலுவை,
சிலுவை அடியில் தலையை வைத்தேன், திருவிலாவில் உடலை வைத்தேன்.
எனக்கு உதவியாக வாரும் திருச்சிலுவை ஐயாவே - ஆமென்.
உம் திருவடி வந்துள்ள உம் அடியவர்களை கருணை கூர்ந்து உம் விண்ணகத்தில்
சேர்த்துக் கொள்ள வேண்டுகிறோம் - ஆமென்.

### பிரிவால் துயருறும்

அன்பு மகன்கள் : வினோத் விக்டோரியா, ஷார்லோ விக்டோரியா
மருமக்கள், பேரன் பேத்திகள், சகோதர சகோதரிகள்
மற்றும் உற்றார் உறவினர்

SHINY Ph : 98421 31493